# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதம் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்கான உரிமைத்துவம் சகிதமான பதவிகளாகும் என்பதுடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை கொழும்பில் மட்டும் அமைந்துள்ளது என்பதுடன் கிளை அலுவலகங்கள் இல்லையென்பதால் இடமாற்றங்கள் பெற முடியாதவையாகும்.

**01. பணிப்பாளர் (தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடம்)- (வெற்றிட எண்ணிக்கை 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவம் (Medicine)/ மருந்தியல் (Pharmacology)/ இரசாயனவியல் (Chemistry)/ நுண்ணுயிரியல் (Microbiology), மூலக்கூறு உயிரியல் (Molecular Biology)/ உயிரியல் (Biology)/ உயிரில் இரசாயனவியல் (Bio Chemistry)/ மருந்தியல் (BSc Pharmacy)/ பௌதீகவியல் (Physics) அல்லது மருந்தியலில் (B Pharm) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

மேற்கூறிய விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை (MM) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயையுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் HM 1-1 ரூபா (140,640 - 15x4,100 - 202,140) சம்பள அளவில் 2025-01-01ஆம் திகதிக்கு உரிய சம்பள நிலை 105,399/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**02. பணிப்பாளர் (நிதி) (வெற்றிட எண்ணிக்கை 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியல் / வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

மேற்கூறிய விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் / மேற்கூறிய விடயத் துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை (MM) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயையுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் HM 1-1 ரூபா (140,640 - 15x4,100 - 202,140) சம்பள அளவில் 2025-01-01ஆம் திகதிக்கு உரிய சம்பள நிலை 105,399/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**03. உள்ளகக் கணக்காய்வாளர் (வெற்றிட எண்ணிக்கை 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது** 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியல் / வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் (நிதி) அல்லது பதவிக்கு இயைபான விடயத் துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத் துறைக்குப் பொருத்தமான வகையில், அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை:** 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (91,960 - 10x2,480 - 15x3,450 - 168,240) சம்பள அளவில் 2025-01-01ஆம் திகதிக்கு உரிய சம்பள நிலை 71,730/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: திறந்த போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய விடயங்கள்:**

**சகல விண்ணப்பதாரர்களும்:**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2025-07-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் மாடி, இல. 130, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை.**